பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 16

வியாழக்கிழமை
12 டிசெம்பர் 2024

கார்த்திகை 27 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

**நான்கு மாதங்களில் 58 இடைவிலகல்கள்**

யாழ்., டிசெ. 12
யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கடந்த ஓகஸ்ட் மாதம் முதல் இது வரையான

11

வடக்கில் சம்பவித்துக் கொண்டிருந்த

# மர்மமான மரணங்களுக்கு காரணம் எலிக்காய்ச்சலே!

உறுதிப்படுத்தியது சுகாதாரத்துறை
நேற்றும் ஒருவர் உயிரிழப்பு

**யாழ்ப்பாணம், டிசெம்பர் 12**

வடமாகாணத்திலும் - யாழ்ப்பாணத்தில் அதிகளவிலும் சம்பவித்துக் கொண்டிருந்த மர்மச்சாவுகள் பலவற்றுக்கு எலிக்காய்ச்சலே காரணம் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதாரத்துறை வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

11

## எலிக் காய்ச்சலால் 10,000 பேர் பாதிப்பு

பெருந்தொற்றாக வியாபிப்பு

கொழும்பு, டிசெ. 12
இலங்கையில் இதுவரை அண்ணளவாக 10 ஆயிரம் பேர் எலிக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனால், இந்த

11

## மருந்துத் தட்டுப்பாடு: நீக்குவதற்கு நடவடிக்கை

» 05

## மீனவர்கள் கடலுக்கு செல்லாதீர்

» 03

## உள்ளூர் அரிசிகள் வடக்கில் தாராளம்!

யாழ்ப்பாணம், டிசெ. 12
வடமாகாணத்தில் உள்ளூர் வகை அரிசி தாராளமாக உள்ளது. தென்னிலங்கையில் இருந்து கொண்டுவரப்படும் அரிசிக்கே பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது என்று யாழ். வர்த்தக சங்கத்

11

## வடக்கில் எலிக்காய்ச்சலுடன் வேறு வைரஸ்கள் பரவலா?

ஆராய்வதற்கு கொழும்பிலிருந்து தனிக்குழுக்கள்

யாழ்ப்பாணம், டிசெ. 12
வடக்கு மாகாணத்தில், எலிக்காய்ச்சலை விடவும் பல்வேறு காய்ச்சல்கள் பரவியுள்ளன என்று சந்தேகிக்கப்படும் நிலையில், அது தொடர்பில் ஆராய்வதற்கு தனிக் குழுக்கள் கொழும்பில் இருந்து இன்றும் நாளையும் வரவுள்ளன.
வடமாகாணத்தில் எலிக் காய்ச்சல் மற்றும் அடையாளம் காணப்படாத இதர காய்ச்சல்கள் காரணமாக ஒவ்வொரு நாளும் பலர் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். இது தொடர்பில் மத்திய சுகாதாரத் திணைக்களத்துக்கு

11

## மர்மக்காய்ச்சல் காரணமாக நேற்று 20 பேர் அனுமதி!

ஆபத்து நிறைந்த மாவட்டமாக
அறிவிக்கப்பட்டது யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம், டிசெ. 12
மர்மக்காய்ச்சல் காரணமாக, பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் நேற்று மட்டும் 20 பேர் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.
யாழ்ப்பாணத்தை எலிக் காய்ச்சல் உள்ளிட்ட பல்வேறு வகை

11

## சமஷ்டியை வழங்குமாறு அநுரவிடம் கூறுங்கள்!

கஜேந்திரகுமார் எம்.பி.
பிரதமர் மோடிக்கு கடிதம்

யாழ்ப்பாணம், டிசெ. 12
தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய சமஷ்டியை வழங்குமாறு ஜனாதிபதி அநுரவை இந்தியப் பிரதமர் மோடி வலியுறுத்தவேண்டும் என்று

11

## யானை தாக்கி ஒருவர் இறப்பு

வவுனியா, டிசெ.12
வவுனியா, வேலங்குளம் பகுதியில் யானை தாக்கியதில் ஓய்வுபெற்ற கிராம அலுவலர் ஒருவர் உயிரிழந்துள்ளார். நேற்று முன்தினம் மாலை இந்தத் துயரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.
வேலங்குளம்

11

## வங்காள விரிகுடாவில் மேலும் தாழமுக்கங்கள்

யாழ்ப்பாணம், டிசெ. 12
வங்காள விரிகுடாவில் இந்த மாதம் மேலும் இரண்டு தாழமுக்கங்கள் உருவாகுவதற்குச் சாத்தியம் உள்ளதாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புவியியல்துறையின் தலைவரும், வானிலையாளருமான நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.
அவர் மேலும்

11




'மாரி மழைதான் விடேலையெண்டால் காய்ச்சல்மழையும் விடாது போல'

## கடந்த ஒரு மாதத்தில் மட்டும் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 21 சிறுவர் துஷ்பிரயோகங்கள்!

யாழ்ப்பாணம், டிசெ. 12
யாழ்ப்பாணத்தில் கடந்த ஒரு மாதத்தில் மட்டும் 21 சிறுவர் துஷ்பிரயோகங்கள் பதிவாகியுள்ளன என்று யாழ்ப்பாணம் மாவட்டச் செயலக சிறுவர் பாதுகாப்புக் குழுக்கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
யாழ்ப்பாணம் மாவட்ட செயலக சிறுவர் பாதுகாப்புக்குழுக் கூட்டம் நேற்று இடம்

11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகள் மீதான தடையினை அநுர அரசு நீக்கவேண்டும்

## நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் வலியுறுத்து

யாழ்ப்பாணம், டிசெ. 12

**விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குவதுடன் இலங்கை அரசமைப்பின் 6ஆவது திருத்தத்தை இரத்துச் செய்து ஈழத் தமிழர்கள் கருத்துச் சுதந்திரத்துடன் அரசியல் களத்தில் ஈடுபடும் சூழ்நிலையை உருவாக்கவேண்டும் என்று நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் இலங்கை அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.**

இதுதொடர்பில் பி. வி. ருத்ரகுமாரன் தெரிவித்ததாவது:-

ஜே.வி.பி. யானது ஆயுதப் போராட்டத்தை இரண்டு தடவைகள் முன்னெடுத்தது. இருந்தும் உங்கள் மீதான தடைநீக்கப்பட்டு சுதந்திரமாக அரசியலில் ஈடுபட அனுமதி அளிக்கப்படவில்லையா?

உங்கள் ஆட்சியிலும் அணுகுமுறையிலும் தமிழ் மக்களுக்குப் போராடவேண்டிய அவசியம் இருக்காது என்று நீங்கள் கூறினீர்கள். நீங்கள் கூறுவதில் உண்மை இருப்பதாக நீங்கள் நம்பினால், 6 ஆவது திருத்தச் சட்டத்தை நீக்கிவிட்டு சுதந்திரமான அரசியல் நடவடிக்கைக்கான சூழ்நிலையை உருவாக்குவதற்கு நீங்கள் ஏன் அஞ்சவேண்டும்?

சிங்கள - பௌத்த மேலாதிக்க சிந்தனையால் சிங்கள அரசியல் இறுகியிருப்பதால் தமிழ் மக்களின் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான அரசியல் வெளி இல்லாமல் போய்விட்டது என்பதே உண்மை.

வெவ்வேறு ஆட்சியாளர்கள் காலத்துக்குக் காலம் மாறி வந்தாலும் சிங்கள-- பௌத்த ஆதிக்க அரச கட்டமைப்பில் மாற்றம் ஏற்படவில்லை. கடுமையான சிங்கள- பௌத்த அரச கட்டமைப்பு காரணமாக. அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தம் கடந்த 30 வருடங்களாக நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பது ஓர் எடுத்துக்காட்டு.

எனவே முன்னைய அரசுகளின் பாணியிலிருந்து விலகி இந்தப் புதிய அரசாங்கம் விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குவதுடன் ஈழத் தமிழர்கள் கருத்துச் சுதந்திரத்துடன் அரசியல் களத்தில் ஈடுபடும் சூழ்நிலையை உருவாக்கவும் வேண்டும் - என்றார். (ச-25)

# தீவகங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட படகுச்சேவைகள்

யாழ்ப்பாணம், டிசெ. 12

சீரற்ற காலநிலை காரணமாக தீவகத்துக்கான கடற்போக்குவரத்து நேற்றுப் புதன்கிழமை மட்டுப்படுத்தப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சீரற்ற காலநிலை காரணமாக நெடுந்தீவு- குறிகாட்டுவானுக்கான குமுதினிப் படகு சேவை நேற்று இரத்துச் செய்யப்பட்டதாகவும் காற்றின் நிலையைக் கருத்திற்கொண்டே இன்று வியாழக்கிழமை சேவை இடம்பெறும் என்று நெடுந்தீவு பிரதேச செயலர் தெரிவித்தார். அதேவேளை குறிகாட்டுவான் - நயினாதீவு இடையேயான படகுச் சேவையும் நேற்று சீரற்ற காலநிலையால் இரத்து செய்யப்பட்டதாக வேலணைப் பிரதேச செயலர் தெரிவித்தார்.

ஊர்காவற்றுறை - எழுவைதீவு, ஊர்காவற்றுறை - அனலைதீவு ஆகிய இரண்டு தீவுகளுக்குமான படகுச்சேவை மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக ஊர்காவற்றுறை பிரதேச செயலர் தெரிவித்தார்.

ஊர்காவற்றுறை - காரைநகர் இடையேயான படகுப் பாதை சேவை வழமைபோல இடம்பெறுவதாக ஊர்காவற்றுறைப் பிரதேச செயலாளர் தெரிவித்தார்.

இன்று வியாழக்கிழமை நிலவும் காலநிலையைக் கருத்திற்கொண்டு படகுச் சேவைகள் முன்னெடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ச-125)

# மின்கட்டணத்தை குறைப்போம்

## அரசு உறுதி

கொழும்பு, டிசெ. 12

மின் கட்டணத்தை 33 சதவீதத்தால் குறைக்க முடியும் என்ற எமது நிலைப்பாட்டில் எவ்வித மாற்றமும் இல்லை என அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார். நாம் அரசாங்கத்தைப் பொறுப்பேற்ற போது இலங்கை மின்சாரசபையில் மக்களிடமிருந்து பெறுக்கொள்ளப்பட்ட பணத்தில் பெரும் தொகை செலவிடப்பட்டிருந்தது.

எனவே தற்போது மின் கட்டணத்தை அதிகரிக்காமல் பேணுவதற்கான நடவடிக்கைகளையே மின்சாரசபை முன்னெடுக்கவேண்டியுள்ளது. கிடைக்கும் முதலாவது சந்தர்ப்பத்திலேயே மின் கட்டணத்தில் திருத்தங்களை மேற்கொண்டு மக்களுக்கு நிவாரணத்தை வழங்குவோம் என்றும் குறிப்பிட்டார். (ச-இ)

# சீரற்ற காலநிலையால் தீவகங்களுக்கான அஞ்சல்சேவைகள் முடங்கின

யாழ்ப்பாணம், டிசெ. 12

சீரற்ற காலநிலை காரணமாக யாழ்ப்பாணம் - தீவகத்துக்கான அஞ்சல் சேவைகள் நேற்று முடங்கியதாக யாழ்.மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

நெடுந்தீவு மற்றும் நயினாதீவுக்கான அஞ்சல் பொதிகள் பேருந்தில் புங்குடுதீவுவரை அனுப்பி வைக்கப்பட்டன. புங்குடுதீவு அஞ்சலகத்திலிருந்து நயினாதீவுக்கு காலை அஞ்சல் அனுப்பப்பட்ட போதிலும் நயினாதீவில் இருந்து மீள அஞ்சலை பெறமுடியாத சூழல் ஏற்பட்டது.

மேலும் நெடுந்தீவு மற்றும் அனலைதீவுக்கான அஞ்சல் சேவைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன. எனினும் காரைநகர், ஊர்காவற்றுறை, மண்டைதீவு , புங்குடுதீவுக்கான அஞ்சல் சேவைகள் இடம்பெற்று வருகின்றன. இன்று வியாழக்கிழமை காலநிலையைக் கருத்திற்கொண்டுசேவைகள் முன்னெடுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-125)

# யாழ்.போதனாவில் 46 தாதியர்கள் கடமையேற்பு

யாழ்ப்பாணம், டிசெ.12

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் பயிற்சியை நிறைவு செய்த 46 தாதியர்கள் தற்காலிகமாக கடமைகளை பொறுப்பேற்றுள்ளனர்.

தாதியர் பயிற்சியை நிறைவுசெய்தவர்கள் தற்காலிகமாகக் கடமையில் ஈடுபட சுகாதார அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.


அதற்கமைய யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் பயிற்சியை நிறைவு செய்த 46 தாதியர்கள் தற்போது தற்காலிகமாகக் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளதாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவக்கலாநிதி த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார். (ச-66)

# சுற்றுலா தொடர்பில் நடமாடும் சேவை

யாழ்ப்பாணம்,டிசெ.12

வடமாகாண சுற்றுலாப் பணியகம், சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையுடன் இணைந்து சுற்றுலா தொடர்பான சேவை வழங்குநர்களுக்கான விழிப்புணர்வூட்டல் மற்றும் நடமாடும் சேவையை வழங்க ஏற்பாடு செய்துள்ளது. இது எதிர்வரும் டிசெம்பர் 16 ஆம் திகதி மற்றும் 17 ஆம் திகதிகளில் காலை 8 மணி முதல் பி.ப. 4 மணி வரை கைதடியிலுள்ள சுற்றுலாப் பணியகத்தில் நடைபெறவுள்ளது. (ச-33-10)

# சீன அரசால் சீருடைகள்



கொழும்பு, டிசெ. 12

சீனா இலங்கைக்கு இலவசமாக வழங்குவதாக உறுதியளித்த பாடசாலைச் சீருடைத் துணி நேற்றுமுன்தினம் உத்தியோகபூர்வமாக இலங்கைக்கு வழங்கிவைக்கப்பட்டுள்ளது.

2025 ஆம் ஆண்டுக்கான பாடசாலைச் சீருடைகளின் முழுத் தேவையும் சீன மக்கள் குடியரசால் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

குறித்த சீருடைத் துணிகள் மூன்று தொகுதிகளாக இலங்கையை வந்தடையவுள்ளது. முதலாவது மற்றும் இரண்டாவது தொகுதிகள் ஏற்கனவே இலங்கையை வந்தடைந்துள்ளன. மூன்றாவது தொகுதி டிசெம்பர் 25 ஆம் திகதி இலங்கையை வந்தடையவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# இலங்கையர் நால்வர் இந்தியாவில் கைது!

கொழும்பு, டிசெ. 12

இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு சட்டவிரோதமாகக் கடல் வழியாகச் செல்ல முயன்ற நால்வர் இராமேஸ்வரத்தில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் கட்டப்பிராய், கோப்பாய் பகுதிகளில் இருந்து தமிழகத்துக்குப் படகு மூலம் சட்டவிரோதமாகச் சென்று முகாம்களில் தங்கியிருந்த நால்வரே இவ்வாறு நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட நால்வரில் 3 ஆண்களும், ஒரு பெண்ணும் அடங்குகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு மக்களின் எதிர்பார்ப்புகளை புதிய அரசு நிறைவேற்றவேண்டும்!

பிரிட்டன் செயலரிடம் வடக்கு ஆளுநர் சுட்டிக்காட்டு

**யாழ்ப்பாணம், டிசெ. 12**

**இந்த அரசாங்கத்தின் காலத்தில் காணிகள் விடுவிப்பு, இராணுவ முகாம்கள் அகற்றல் உள்ளிட்ட தமது பிரச்சினைகள் தீர்க்கப்படும் என வடக்கு மக்கள் நம்பிக்கை வைத்துள்ளனர். அதனை இந்த அரசு நிறைவேற்றவேண்டும்.**



-இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், பிரிட்டன் தூதரகத்தின் சமாதானத்தை கட்டியெழுப்புதல் மற்றும் மனித உரிமைகளுக்கான முதனிலைச் செயலர் ஹென்றி டொனைட்டிடம் சுட்டிக்காட்டினார்.

வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சந்திப்பின் போதே ஆளுநர் மேற்கண்டவாறு கூறினார்.

வடக்கு மாகாணத்தில் பாதுகாப்புத் தரப்பினரிடமிருந்து இன்னமும் காணிகள் விடுவிக்கப்படவேண்டும். குறிப்பாக மக்களின் காணிகள் கடந்த காலங்களில் அவர்கள் இடம்பெயர்ந்திருந்த சந்தர்ப்பங்களில் வனவளத் திணைக்களம் மற்றும் வனஉயிரிகள் திணைக்களம் என்பனவற்றால் கையகப்படுத்தப்பட்டதனால் விவசாயிகளின் வாழ்வாதாரம் பின்னடைவுகளைச் சந்தித்துள்ளது.

எனவே இந்த அரசாங்கத்தின் மீது நம்பிக்கை வைத்துள்ள வடக்கு மக்களின் நம்பிக்கையை இந்த அரசாங்கம் நிறைவேற்றவேண்டும் என்றும் வடக்கு ஆளுநர் சுட்டிக்காட்டினார். (ச-125,20,27,66)



## மீனவர்கள் கடலுக்கு செல்லவேண்டாம்!

புத்தளத்திலிருந்து காங்கேசன்துறை மற்றும் மன்னார் ஊடாக முல்லைத்தீவு வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட ஆழமான மற்றும் ஆழமற்ற கடற்பரப்புகளுக்குக் கடற்றொழிலாளர்களை செல்ல வேண்டாம் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

தென்மேற்கு வங்கக்கடலில் நிலை கொண்டுள்ள குறைந்த காற்றமுத்த தாழ்வுப் பகுதி வடமேற்குத் திசையில் வடக்கு இலங்கைக்கு அருகில் தமிழகக் கடற்கரையை நோக்கி நகர்ந்து செல்லும் என வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகளில் காற்றின் திசை மாறுபடுவதுடன் காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 25 -35 கிலோ மீற்றர் வரை காணப்படும் என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. (ச-இ)



## 18 இந்திய மீனவர்கள் நிபந்தனையுடன் விடுதலை

எல்லைதாண்டி இலங்கைக் கடற்பரப்பில் மீன்பிடித்த குற்றச்சாட்டில் வடமராட்சி கிழக்கு கடற்பரப்பில் வைத்து கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 18 இந்திய மீனவர்களையும் பருத்தித்துறை நீதிமன்றம் நிபந்தனையுடன் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை விடுதலை செய்துள்ளது.

தடைசெய்யப்பட்ட இழுவைமடியைப் பயன்படுத்தி இலங்கைக் கடற்பரப்புக்குள் நுழைந்து கடந்த வாரம் மீன்பிடியில் ஈடுபட்டபோது இலங்கைக் கடற்படையினரால் குறித்த 18 இந்திய மீனவர்கள் கைதுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-22,100)

## இஸ்ரேலில் வேலை சிக்கிக்கொள்ளாதீர்

கொழும்பு , டிசெ. 12

இஸ்ரேலில் வேலைவாய்ப்பு பெற்றுத்தருவதாக கூறி மோசடியில் ஈடுபடும் நபர்களிடம் சிக்க வேண்டாமென வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் அறிவித்துள்ளது.

லொத்தர் மூலம் தெரிவு செய்யப்பட்ட ஆயிரத்து 802 பேர் டிசெம்பர் - ஜனவரி மாத காலப்பகுதியில் இஸ்ரேலுக்கு செல்லவுள்ளதாகவும் ஏப்ரல் முதல் 45-31 பேர் கட்டடப் பணிகளுக்கென இஸ்ரேல் சென்றுள்ளதாகவும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது. (ச-22,6)

## அமெ.ஒப்பந்தத்தில் விலகினார் அதானி

கொழும்பு, டிசெ. 12

கொழும்புத்துறைமுகத்தின் மேற்கு முனையத்தை மேம்படுத்துவதற்காக அமெரிக்காவுடனான 553 மில்லியன் டொலர் கடன் ஒப்பந்தத்தில் இருந்து அதானி குழுமம் விலகியுள்ளது.

இருப்பினும், மேற்கு முனையத்தின் அபிவிருத்தியை அதானி குழுமம் அதன் உள் மூலதன கையிருப்பைப் பயன்படுத்தி மேற்கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## வெற்றுக்காணிகளுக்கு சிவப்பு அறிவித்தல்

யாழ்ப்பாணம், டிசெ.12

நீர்வேலி, கோப்பாய் பிரதேசங்களில் பராமரிப்பின்றிக் காணப்படும் வெற்றுக்காணிகளை உடன் துப்புரவுசெய்யுமாறு அந்தக்காணிகளுக்கு சிவப்பு அறிவித்தல் ஒட்டப்பட்டுவருகின்றது. காணிகளை துப்புரவு செய்யாத உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என சுகாதாரத் துறையினர் தெரிவித்துள்ளனர். (ச-25, 17)




தனக்குத் தனக்கு எண்டால் சுளகு படக்குப் படக்கெண்டு அடிக்கிற மாதிரி, கனபேர் தங்கட அலுவல்களை மட்டும் வடிவா,ஒழுங்கா, அந்தந்த நேரத்தில செய்துபோட்டு பொதுவேலையளை மட்டும் கண்டும் காணாமல் செய்யாமல் விட்டிடுவினம். இப்பிடி தன்ர வேலையை மட்டும் பாக்கிறவை வீட்டில இருந்தால் பிரச்சினையில்லை. ஆனால் வீட்டுக்கட்சியில எல்லாத்துக்கும் பொறுப்பா இருக்க வேண்டியவரே, தன்ர வேலையை மட்டும் சரியாக் கவனிச்சுக் கொண்டு, கட்சிக்கு செய்யவேண்டிய முக்கியமான வேலையளைத் தட்டிக்கழிக்கிறது சரியில்லைத்தானே.

இந்தமுறை பார்லிமெண்ட் எலக்சனில போட்டியிட்ட வேட்பாளர்மார் ஒவ்வொருத்தரும் தனித்தனியாவும், கட்சிகள் தனியாவும் தங்கட வரவு - செலவு விவரத்தை டிசெம்பர் ஆறாம் திகதி இரவு பன்னிரெண்டு மணிக்குள்ள தங்களிட்ட ஒப்படைக்கோணும் எண்டு தேர்தல் ஆணைக்குழு ஓர்டர் போட்டிருந்தது. ஜனாதிபதி எலக்சனில சொன்ன திகதிக்குப் பிறகு குடுத்த பொதுவேட்பாளருக்கு நடந்த கதி எல்லாருக்கும் தெரியும் தானே? அவர் நேரில கொண்டுபோய் குடுக்காமல் மின்னஞ்சலில அனுப்பினதால அதை தேர்தல் ஆணைக்குழு ஏற்கேலை. கால அவகாசம் முடிஞ்சபிறகு குடுத்ததால அவருக்கு எதிரா வழக்குப் போட ஆயத்தம் நடக்குதாம். வழக்கில பொது வேட்பாளர் தோத்தால் மூண்டு வருசத்துக்கு அவரின்ர பிரஜாவுரிமையை நிப்பாட்டவும் அதிகாரம் இருக்கு. இப்பிடிச் சிக்கல் தங்களுக்கு வந்திடக்கூடாது எண்டு இந்தமுறை வேட்பாளர்மார் எல்லாரும் எலக்சன் முடிஞ்ச உடனேயே இந்த வரவு-செலவுக் கணக்கு விவரத்தைச் செய்து தேர்தல் ஆணைக்குழுவின்ர மாவட்ட ஒப்பீஸ்களுக்கு அனுப்பிப் போட்டினம். அப்பிடி முதலே தன்ர வரவு, செலவுக் கணக்கை அனுப்பின ஆக்களில ஒருத்தர் வீட்டுக்கட்சியின்ர பதில் செயலாளர் சத்தியமான பாக்குத்தர். அந்தக் கட்சியில போட்டிபோட்ட மற்ற வேட்பாளர்மாரும் டிசெம்பர் ஆறாம் திகதிக்குள்ள ஒருமாதிரி கணக்கை முடிச்சு அனுப்பிட்டினம். அப்பிடி அனுப்பின பிறகுதான் அவைக்கு கட்சிரீதியாவும் ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திலயும் எவ்வளவு செலவு நடந்தது, எவ்வளவு காசு எங்கையிருந்து கிடைச்சது எண்ட விவரத்தை அனுப்பவேணும் எண்ட நினைவு வந்து, பதில் செயலாளரிட்ட போன் பண்ணி "எங்கட தேர்தல் மாவட்ட வரவு - செலவு அறிக்கை எலக்சன் கொமிசனுக்கு அனுப்பியாச்சு தானே?" எண்டு கேட்டிருக்கினம். அதுக்கு செயலாளர் வலுகூலா "இல்லையே. அப்பிடி அனுப்போணுமோ? வேட்பாளர்மார் அனுப்பினால் காணாதோ?" எண்டு கேக்க, போன் பண்ணினவைக்கு நெஞ்சுக்க திக்கெண்டு போட்டுதாம்.

"இனிக் கணக்கறிக்கைசெய்து சரிபார்த்து அனுப்ப காலம் போட்டுதே. வேணுமெண்டால் நான் கொண்டுபோய் வவுனியாக் கச்சேரியில இரவு குடுக்கட்டோ?" எண்டு கேட்டாராம் செயலாளர். எந்த மாவட்டத்தில வேட்புமனுத்தாக்கல் செய்தினமோ அந்தந்த மாவட்டத்திலதான் கணக்கறிக்கை குடுக்கோணுமெண்டது கூட அந்தச் செயலாளருக்குத் தெரியேலை. ஆத்தில போட்டதை குளத்தில தேடுற ஆள் தானே அவர். பிறகு கட்சிக்காரர் ஆளை நெருக்கிப் பிடிச்சு ஒருமாதிரி கணக்கறிக்கையை ஈமெயில்ல அனுப்பி அதை பிரிண்ட் எடுத்து, சாமத்துக்குள்ள கொண்டுபோய் தேர்தல் ஆணைக்குழு விட்ட குடுத்திட்டினமாம். இல்லாட்டி பிறகு கட்சிக்கு இருக்கிற வழக்கு பத்தாதெண்டு தேர்தல் ஆணைக்குழுவும் வழக்குப் போட்டிருக்கும். இப்பிடி தன்ர வேலையை மட்டும் பார்த்துப்போட்டு, கட்சி வேலையளைக் கவனிக்காமல் விட்டேத்தியா இருக்கிறவர் இன்னும் என்னென்ன திருகுதாளங்கள் செய்யப்போறாரோ? வீட்டுக்கட்சிக்கு இவரால எப்பவுமே 'சத்திய'சோதனைதான்.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மதுபானக் கடைகளை நிரந்தரமாக மூடுங்கள்

## கிளிநொச்சியில் இன்று போராட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 12
அண்மைக்காலமாக அதிகரித்த மதுபானக் கடைகளை நிரந்தரமாக மூட வலியுறுத்தி கண்டனப் போராட்டம் ஒன்று இன்று வியாழக்கிழமை கிளிநொச்சி டிப்போ சந்தியில் முன்னெடுக்கப்படவுள்ளது.
'பொருளோடுபுகழையும் உயிரோடு உறவையும் அழிக்கும் போதைப் பொருளை அழித்திடுவோம்' என்ற தொனிப்பொருளில் செயற்பட்டு வரும் மதுபோதைக்கு எதிரான இயக்கம் மற்றும் வடக்கு - கிழக்கு மறுவாழ்வு அமைப்பு இணைந்து இந்தக் கண்டனப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளன.
சமூகமட்ட பொது அமைப்புகள், தன்னார்வத் தொண்டு அமைப்புகள், அரசியல் செயற்பாட்டாளர்கள் அனைவரையும் இப்போராட்டத்தில் கலந்து கொண்டு போராட்டத்துக்கு பலம்சேர்க்குமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். (சு-100)

# பிறப்புச் சான்றிதழ் நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், டிசெ. 12
யாழ். மாவட்டத்தில் இதுவரை பிறப்புச் சான்றிதழை பதிவு செய்யாத சிறுவர்களுக்கான நடமாடும் சேவை யாழ். மாவட்ட செயலர் ம.பிரதீபன் தலைமையில், மாவட்டச் செயலகத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. நடமாடும் சேவையை பெண்கள், சிறுவர் மற்றும் இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டு அமைச்சின் மேலதிக செயலாளர் திருமதி நில்மினி ஹேரத், பணிப்பாளர் திருமதி இரேஷ தர்மசேனா மற்றும் யு.என்.எப்.பி.ஏ. நிறுவனத்தின் ஆலோசகர் உதேனி தேவரப்பெரும ஆகியோர் பதிவு செய்யப்பட்ட பிறப்புச் சான்றிதழ்களை பயனாளிகளுக்கு வழங்கி வைத்தனர். (ச-ரி-25, 9,66)

# பாரம்பரிய உணவுத் திருவிழா யாழ்ப்பாணத்தில் 3 தினங்கள்

யாழ்ப்பாணம்,டிசெ.12
வடமாகாண சுற்றுலாப் பணியகத்தினால் நடத்தப்படும் பாரம்பரிய உணவுத்திருவிழா எதிர்வரும் 14 ஆம், 15 ஆம், 16 ஆம் திகதிகளில் பி.ப. 3 மணி தொடக்கம் இரவு 9 மணி வரை முற்றவெளிப்பகுதியில் இடம்பெறவுள்ளது.
பாரம்பரிய கலைநிகழ்வுகள் மூன்று தினங்களிலும் பி.ப. 4 மணிக்கு இடம்பெறும். பழைய வாகனங்களின் பவனி 14 ஆம் திகதி சனிக்கிழமை பி.ப. 3 மணிக்கு இடம்பெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சு-33-10)

# சதுரங்கத்தில் கொக்குவில் மாணவி தங்கம்

யாழ்ப்பாணம், டிசெ.12
தேசிய ரீதியில் இலங்கை பாடசாலைகள் சதுரங்க சம்மேளனத்தால் நடத்தப்பட்ட சதுரங்கப் போட்டியில் யாழ். கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை மாணவி கஜீனா தர்ஷன் தங்கப் பதக்கத்தைப் பெற்றுள்ளார்.
இவர் தாய்லாந்தில் டிசெம்பர்மாதம் நடைபெறவுள்ள ஆசிய இறுதிப் போட்டியில் பங்குபற்றவுள்ளார். மேலும் சேர்ஜியாவில் நடைபெறவுள்ள உலக பாடசாலைகள் சதுரங்கப் போட்டிகளிலும் மற்றும் பிட் கடெற் போட்டிகளிலும் இலங்கை அணி சார்பில் விளையாடவுள்ளார். (சு-45-20)



# இறந்த நிலையில் சிறுத்தை மீட்பு

முல்லைத்தீவு,டிசெ.12
விசுவமடு தொட்டியடிப் பகுதியில் அமைந்துள்ள கோவில் வளாகத்திலுள்ள மடப்பள்ளிப் பகுதியில் இறந்த நிலையில் சிறுத்தையொன்று நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மீட்கப்பட்டுள்ளது.
ஆலயப் பூசகர் அதனை அவதானித்த நிலையில் முல்லைத்தீவு மாவட்ட வனஜீவராசிகள் திணைக்களத்தினருக்குத் தகவல் வழங்கினார். சம்பவ இடத்துக்கு விரைந்த திணைக்களத்தினர் இறந்த சிறுத்தையை மீட்டுச் சென்றனர். (சு-33-113)

# நூல் வெளியீடு

கிளிநொச்சி, டிசெ.12
பளையூர் பாலாஜினியின் 'அவள் பெயர் முத்தழகு' எனும் சிறுகதைத் தொகுதி நூல் வெளியீடு, பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலக மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணிக்கு நடைபெறவுள்ளது.
கிளிநொச்சி மாவட்ட செயலக பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் அ. கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன் பங்கேற்கவுள்ளார்.
நூலின் சிறப்புப் பிரதியை பளை மாசார் அ.த.க. பாடசாலை ஆசிரியை திருமதி ஜெயராதிகா தரணிதரன் பெற்றுக்கொள்வார். (சு-25,9)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மகிழ்ச்சியான நாளாக இருக்கும். ஆனால், எதிர்பாராத செலவுகள் அதிகரிக்கும். தேவையான பணம் கையில் இருப்பதால், உற்சாகமாகச் சமாளித்துவிடுவீர்கள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**இடபம்:** உற்சாகமான நாளாக அமையும். மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். சிலருக்கு திடீர் பொருள் வரவுக்கு வாய்ப்பு உண்டு. வாழ்க்கைத்துணைவழி உறவுகளிடம் எதிர்பார்த்த காரியம் நல்லபடி முடியும்.

**மிதுனம்:** இன்று எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கும் யோகம் உண்டாகும். துணிச்சலாக சில முடிவுகளை எடுப்பீர்கள். சகோதர வகையில் சுபச் செலவுகள் ஏற்படக்கூடும்.

**கடகம்:** இன்று உற்சாகமாகக் காணப்படுவீர்கள். உறவினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பான சூழ்நிலை காணப்படும். சுபநிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்படக்கூடும். தாய்வழி உறவுகளால் நன்மை உண்டாகும்.

**சிம்மம்:** தேவையான பணம் கையில் இருக்கும். காரியங்கள் முடிவதில் தாமதம் ஏற்பட்டாலும் முடித்து விடுவீர்கள். இளைய சகோதரர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு உண்டாகும்.

**கன்னி:** தந்தை வழி உறவுகளால் பணவரவுக்கு வாய்ப்பு ஏற்படும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதில் பெரியவர்களின் ஆலோசனை அவசியம். மாலையில் குடும்பத்துடன் உறவினர் வீட்டுக்குச் சென்று வருவீர்கள்.

**துலாம்:** உற்சாகமான நாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உங்கள் முயற்சிகளுக்கு வாழ்க்கைத்துணை ஒத்துழைப்பு தருவார். பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

**விருச்சிகம்** தெய்வ அனுக்கிரகம் நிறைந்த நாளாக இருக்கும். காரியங்களில் சிறுசிறு தடைகள் ஏற்பட்டாலும் முடிந்துவிடும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**தனுசு:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். ஆனால், திடீர்ச் செலவுகளால் கையிருப்பு கரையும். உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி நிலவும்.

**மகரம்:** எதிர்பாராத அதிர்ஷ்ட வாய்ப்புகள் ஏற்படும். சிலருக்குக் குடும்ப விஷயமாக வெளியூர்ப் பயணம் மேற்கொள்ள நேரிடும். மாலையில் உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி ஏற்படும்.

**கும்பம்:** தந்தை வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்களின்சேர்க்கைஉண்டாகும். மாலையில்குடும்பத்துடன் கோயில்களுக்குச் சென்று பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள்.

**மீனம்:** இன்று எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவேண்டிய நாள். புதிய முயற்சியைக் கண்டிப்பாகத் தவிர்க்கவும். மற்றவர்களுடன் பேசும்போது வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், வார்த்தைகளில் நிதானம் தேவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை



நாளொரு நல்வார்த்தை

வாழ்க்கை என்பது நீ சாகும் வரை அல்ல
மற்றவர் மனதில் நீ வாழும் வரை

- அன்னை தெரேசா


# மீனவர்களையும் கவனியுங்களேன்!

இலங்கையில் அண்மையில் ஏற்பட்ட பெங்கால் புயலின் தாக்கத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளை, இழப்பீடுகளைப் பெறுவதற்காகப் பதிவுசெய்யுமாறு அறிவுறுத்தியிருக்கின்றது அநுர அரசாங்கம். விவசாயிகளுக்கு ஏற்பட்ட இழப்பீடுகளுக்கு நிகரான பெறுமதி வழங்கப்படுமா? இழப்பீடுகளின்போது விவசாயிகளின் உடல் உழைப்புக்கான கணக்கீடுகளும் மேற்கொள்ளப்படுமா? என்ற கேள்விகள் - சந்தேகங்கள் எல்லாம் இந்த விடயத்தில் இருக்கவே செய்கின்றன. ஆனால், எல்லாவற்றுக்கும் மேலாக, விவசாயிகளுக்கு இழப்பீடுகள் விரைந்து வழங்கப்படும் என்று விடுக்கப்பட்டுள்ள அறிவித்தலும், அதற்குரிய முன் முயற்சிகளும் பாராட்டப்பட வேண்டியவை. நல்லது.

ஆனால், பெங்கால் புயலால் விவசாயிகள் மட்டும்தான் பாதிக்கப்பட்டார்களா? என்ற கேள்வியும் இங்கெழுவது தவிர்க்கப்பட முடியாததாகின்றது. இந்தப் புயலாலும் அது ஏற்படுத்திய பேரிடர்களாலும் விவசாயிகள் எவ்வளவுக்கு எவ்வளவு பாதிக்கப்பட்டார்களோ அவ்வளவுக்கு மீனவர்களும் பாதிக்கப்பட்டனர். சுமார் பத்து நாள்களுக்கும் மேலாக மீன்பிடித் தடைக்காலம் (எச்சரிக்கைக்காலம்) தொடர்ச்சியாக நடைமுறையில் இருந்தது. தற்போதும், ஒரு காற்றுச் சுழற்சி காரணமாக கடல் தன் இயல்பை இழந்துள்ளதால், மீனவர்களின் தொழில் வாய்ப்பு முற்றாகவே அற்றுப் போயுள்ளது. நேர்மையாகக் கூறவேண்டுமெனில் கடந்த ஒரு மாதத்துக்குள் அண்ணளவாக இருபது நாள்களில் மீனவர்களின் வாழ்வாதாரம் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

பயிரழிவும் மீன்பிடியும் ஒன்றல்லதான். வெள்ளம் வடிந்தோடிய பின்னர், மீண்டும் பதப்படுத்தி - பண்படுத்தி - விளைவிக்கவும், வருமானம் பெறவும் ஒரு விவசாயியால் அடுத்த பருவத்தின்போதே முடியுமாக இருக்கும். ஆனால், கடலின் நிலை நாளை இயல்புக்கு வந்தால், நாளை மறுதினமே மீனவர்களின் கைகளில் பணம். எனவே, இந்த விடயத்தில் விவசாயிகளுக்குக் கூடுதல் கரிசனை காட்டத்தான்வேண்டும். அதை இம்மியும் மறுப்பதற்கில்லை. அதற்காக மீனவர்களை முற்றாகப் புறக்கணித்துவிடமுடியாது. புயலாலும் காற்றழுத்தத்தாலும் பாதிக்கப்படும்போது, ஒரு நாளுக்கு இவ்வளவு தொகை இழப்பீடு என்றதொரு திட்டம் எமது அயல் கடற்பரப்பான தமிழகத்தில் உண்டு. அவ்வாறிருக்கையில், குறைந்தபட்சம் மீன்பிடி பாதிக்கப்படும் நாள்களுக்கான இழப்பீடுகளையாவது மீனவர்களுக்கு வழங்கவேண்டும். அதுதான் ஒட்டுமொத்த மீனவசமூகத்தின் எதிர்பார்ப்புமாக இருக்கின்றது.

மழைக்காலத்தில், மாதத்துக்கு இரண்டு, மூன்று, நான்கு காற்றுச் சுழற்சிகளையும், தாழமுக்கங்களையும் இயல்பாகவே எதிர்கொள்ளும் இலங்கை போன்ற நாட்டில், மீனவர்களின் வாழ்வும், பொருளாதாரமும் சாபக்கேடாகவே மாறிவருகின்றது. மீன்பிடியைப் பிரதான பொருளாதாரமாகக் கொண்டிருக்கும் நாடு என்ற வகையில், 'ஓர் இழப்பீட்டுக் கட்டமைப்பை' இலங்கை என்றோ ஏற்படுத்தியிருக்க வேண்டும். ஆனால், துரதிர்ஷ்டவசமாக இதுவரை அது நிகழ்ந்ததாக இல்லை. எனவே, மாற்றங்களை தன் கொள்கையாக வரித்திருக்கும் அநுர அரசாங்கமாவது, மீனவர்களின் வாழ்வாதாரத்தில் ஒரு காத்திரமான மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். சீரமைப்பு என்பது அரச கட்டமைப்புக்கு உட்பட்டவை மட்டுமல்ல. மாறாக இவையும்தான்...



# மருந்துத் தட்டுப்பாட்டை நீக்குவதற்கு நடவடிக்கை

## சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

**கொழும்பு, டிசெ. 12**

**எதிர்வரும் நாள்களில் ஓரிரு மருந்துகளுக்கு தற்காலிக தட்டுப்பாடு ஏற்படலாம். அவ்வாறு மருந்துத் தட்டுப்பாடு ஏற்படும் பட்சத்தில் அதுதொடர்பில்விரைந்துநடவடிக்கைஎடுக்கஅரசாங்கம்தயாராகவுள்ளது என்று சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.**

அரச மருந்தகங்கள் கூட்டுத்தாபனத்திற்கும் உள்நாட்டு வர்த்தகர்களுக்கும் இடையில் முன் பதிவுகளை வழங்குவதில் குறைபாடுகள் காணப்பட்டதாகவும், அவை தற்போது நிவர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக் காட்டினார். ஏறக்குறைய 50 பில்லியன் ரூபா பெறுமதியான விலைமனு நடவடிக்கைகளுக்கு உட்பட்டு கிட்டத்தட்ட 350 வகையான மருந்துகளை உற்பத்தி செய்வதற்கான அனுமதி கிடைத்துள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார். (ச-இ)

# பரீட்சை மேற்பார்வையாளர் கொடுப்பனவு குறைப்பு


கொழும்பு, டிசெ. 12

க.பொ.த. உயர்தர பரீட்சைக்குக் கடமைக்குச்செல்லும் ஆசிரியர்கள் அதிபர்களுக்கான போக்குவரத்துக் கொடுப்பனவு குறைக்கப்பட்டுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார். பத்து கிலோமீற்றர் தூரத்துக்கான கொடுப்பனவு ஆயிரம் ரூபாவிலிருந்து 500 ரூபாவாகவும் ,510 கிலோமீற்றர் தூரத்துக்கான கொடுப்பனவு 750 ரூபாவிலிருந்து 400 ரூபாவாகவும்,25 கிலோமீற்றர் தூரத்துக்கான கொடுப்பனவு 500 ரூபாவிலிருந்து 300 ரூபாவாகவும், இரண்டு கிலோமீற்றருக்கு குறைவான தூரத்துக்கான கொடுப்பனவு 300 ரூபாவிலிருந்து 200 ரூபாவாகவும் குறைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ச-6)

# யானை வளர்ப்பு தடையில்லை

கொழும்பு, டிசெ. 12

தனிநபர்கள் யானையை வளர்ப்பதற்கு எதுவித தடையுமில்லை. தனியாரால் யானை வளர்ப்பது இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட ஒன்றே என வன உயிரிகள் பாதுகாப்புத் திணைக்கள பணிப்பாளர் நாயகம் சந்தன சூரியபண்டார தெரிவித்துள்ளார். ஆனால் யானை குட்டி போட்டால் புதிதாகப் பிறந்த குட்டியை பதிவு செய்ய வேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார். (ச-22,6)



### நிர்ணய விலையைமீறி

# அரிசி விற்பனை 50பேர்சிக்கினர்

கட்டுப்பாட்டு விலையைவிட அதிக விலைக்கு அரிசி விற்பனை செய்த 50 கடை உரிமையாளருக்கு எதிராக நேற்று நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் அதிகாரசபை தெரிவித்துள்ளது. அதேவேளை கைது செய்யும் நடவடிக்கை நேற்று முதல் விஸ்தரிக்கப்பட்டுள்ளதாகவும் அதன் பணிப்பாளர் அசேல பண்டார குறிப்பிட்டார். (ச-இ)

# வருமான ஈட்டலுக்கு அரச பங்களாக்கள்

கொழும்பு, டிசெ. 12

முன்னாள் ஜனாதிபதிகள், பிரதி அமைச்சர்கள் மற்றும் பல்வேறு அரச நிறுவனங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள மாளிகைகளை, பொருளாதார ரீதியாகப் பயனுள்ளதாகப் பயன்படுத்துவதற்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, பொதுநிர்வாக மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சர் ஆகியோர் முன்வைத்த ஒருங்கிணைந்த பிரேரணைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. இந்த அரசு சொத்துகளைப் பராமரிப்பதற்காக பெருமளவு நிதி செலவழிக்கப்பட்டுள்ளபோதும் அவற்றினால் குறைவான பலனே ஈட்டப்படுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

செய்தி : 021 463 0000
விளம்பரம் : 021-463 101
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : [illegible]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரூ.20 இலட்சம் மோசடி யாழில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், டிசெ.12

தளபாடங்களைத் தருவதாகக் கூறி பெருமளவான நிதி மோசடியில் ஈடுபட்ட சந்தேகநபர் ஒருவர் நேற்று யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர், 20 இலட்சத்து 32ஆயிரம் ரூபா பெறுமதியான தளபாடங்களைத் தருவதாகக் கூறி, வவுனியாவில் உள்ள நபர் ஒருவரை ஏமாற்றிப் பணத்தைப் பெற்றுவிட்டு பல மாதகாலமாகத் தலைமறைவாகியிருந்தார்.

இந்த நிலையில் பாதிக்கப்பட்டவரின் முறைப்பாட்டுக்கமைய யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜெய மஹா தலைமையின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் கோண்டாவில் பகுதியில் வைத்து பொலிஸ் விசேட குற்றத்தடுப்பு பிரிவினரால் குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் அவரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ச-27)

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரி போதனாசிரியர்
**S.திருப்பரன்** அவர்களின்
அன்பு மாமனார்

**இராசா சண்முகலிங்கம்**

அவர்கள் கடந்த 07.12.2024 சனிக்கிழமை காலமாகியதையிட்டு அவரது இழப்பினால் துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கல்களையும் அனுதாபங்களையும் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
ஊழியர் சிக்கன கடன உறவு கூட்டறவுச்சங்கம்,
தொழில்நுட்பவியல் கல்லூரி, யாழ்ப்பாணம்

## 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**திருமதி நாகலிங்கம் சரஸ்வதி**
திதி : 12.12.2024


நிஜங்களில் நீங்கள்
எங்கள் அருகில் இல்லை
தீராத கண்ணீர்த் துளிகளாய்
ஆண்டுகள் ஆறு கடந்தாலும்
கறை படிந்த ஆடைபோல்
என்றும் அழியாது நிறைந்துள்ளீர்
அம்மா...

உங்கள் ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அத்தியடி, யாழ்ப்பாணம். குடும்பத்தினர்

(CS/56882) J-1

## காணவில்லை



கடந்த (01.12.2024) ஞாயிற்றுக் கிழமை அன்று கந்தன் இரத்தினம் வயது (74) என்பவர் காலை 09.00 மணியளவில் சந்தைக்குச் செல்வதாக சென்றவர் இன்று வரை வீடு வந்து சேரவில்லை. இவர் கடைசியாக அணிந்திருந்த ஆடை நீல நிற சாரம் மற்றும் கட்டம் போட்ட சேட் அணிந்திருந்தார்.

இவரைக் கண்டவர்கள் கீழ் வரும் தொலைபேசி எண்ணிற்கு தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு -: 077 078 1435
077 667 9477
077 617 4201

(CS 56891) P-1

## மரண அறிவித்தல்



மண்ணில் 01 . 12 . 1934
விண்ணில் 11 . 12 . 2024

**திருமதி. குணஞானவதி குலசிங்கம்**

[இளைப்பாறிய ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் - யாழ் போதனா வைத்தியசாலை]

வறுத்தலைவிளானைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குணஞானவதி குலசிங்கம் நேற்று புதன்கிழமை (11.12.2024) காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - சிவஞானவதி தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கந்தையா குலசிங்கத்தின் அன்பு மனைவியும், அமரர் திரு. கு. ராஜ்குமார், திருமதி ந. ஷகீலா (கனடா) டாக்டர் கு. சுரேஷ்குமார் (மகப்பேறு பெண் நோயியல் வைத்திய நிபுணர், யாழ் போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்பு தாயாரும், திரு சு.நகுலேந்திரன் (கனடா), திருமதி சு. வாசுகி (இளைப்பாறிய ஆசிரியை) ஆகியோரின் அன்பு மாமியாரும், அமரர் தி. குகஞானவதி, திருமதி ம. குலஞானவதி (கனடா), திருமதி சி. செந்தில்ஞானவதி (கனடா) அமரர் திருமதி இ.கெயன்ஞானவதி (கனடா), திருமதி ச. மகாஞானவதி (வவுனியா), மற்றும் அமரர் திரு. குகஞானலிங்கம் ஆகியோரின் அன்பு சகோதரியும் செல்வன் நிகாஷ் (கனடா), செல்வி ந. ராகவி (கனடா) செல்வி சு. துவாரகி, செல்வி சு. மயூரகி ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று வியாழக்கிழமை (12.12.2024) முற்பகல் 11 மணியளவில் அன்னாரில் "கொக்குவில்" இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல. 15 செம்பியன் வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

தகவல் குடும்பத்தினர்
0777 256 683 077 3754 896

## மரண அறிவித்தல்



தோற்றம் 24 . 04 . 1940
மறைவு 11 . 12 . 2024

**மகாலட்சுமி கணபதிப்பிள்ளை**

யாழ்ப்பாணம் கொக்குவிலை பிறப்பிடமாகவும் அரசடி ஒழுங்கை தட்டா தெருவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகாலட்சுமி கணபதிப்பிள்ளை நேற்று (11.12.2024) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு-இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற செல்லையா கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான செல்லையா-இராசம்மாவின் மருமகளும் காலஞ்சென்ற சரஸ்வதி, நாகரத்தினம், தங்கராசா மற்றும் ரத்தினம் (அவுஸ்ரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற சரஸ்வதி, மாணிக்கவாசகர் ஆகியோரின் மைத்துணியும் விஜயலட்சுமி (ஜேர்மனி), கடம்பேஸ்வரி, கிருபாகரன் (ராசன்), சறோயினிதேவி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஸ்ரீதரன், மோகனதாஸ், அமுதா, சங்கர் ஆகியோரின் மாமியாரும் துயேஸ்கரன் (பொலிஸ், யாழ்ப்பாணம்), டிலானி, நிலோஜன், டிலக்ஷனா (பிரான்ஸ்), டிசாளினி, டினுஷா, குமரன் (பெலிஸ், நிந்தவூர்), வாகினி, ரூஜன், ஷோபிகா மற்றும் நிருஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் தர்நிஷா, பிரணகா, கிறிஸ்தா, நிவிதரன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.12.2024) வியாழக்கிழமை முற்பகல் 09.30க்கு ஆரம்பமாகி மு.ப. 11.00 மணியளவில் கோம்பயன் மணல்இந்து மயானத்திற்கு காலை 11.00 மணிக்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

13, அரசடி ஒழுங்கை,
தட்டாதெரு யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.
மகன் :- 076 985 4453
மகள் :- 077 456 5747

(CS 2022) P-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பரிசளிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.12
சாவகச்சேரி நகராட்சி மன்றத்துக்குட்பட்ட மீசாலைப் பொதுநூலகத்தின் தேசிய வாசிப்பு மாதப் பரிசளிப்பு விழா மீசாலைப் பொதுமண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.
நிகழ்வில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் மருத்துவர் மருத்துவக் கலாநிதி வினோதா அச்சுதன் பிரதம விருந்தினராகவும், சாவகச்சேரிப் பிரதேச செயலகத் திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் எஸ்.ஆர்.சர்வேந்திரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொண்டனர். (ச-45-66)



# மாற்றுத்திறனாளிகளுக்கு மாதாந்தப் பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 12
மாற்றுத் திறனாளிகளுக்கான 2024 ஆம் ஆண்டுக்கான இறுதி மாதாந்தப் பொதுக்கூட்டம் சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.
நிகழ்வில் அனர்த்த காலங்களில் உடலியல் ரீதியாக ஏற்படுகின்ற பாதிப்புகளிலிருந்து பாதுகாப்பாக இருக்கவேண்டும் என்பதை அடிப்படையாகக் கொண்டு 'ஆரோக்கியமான மனித வாழ்வு' எனும் தலைப்பில் மருத்துவ ஆலோசனையை ஆயுர்வேத வைத்தியர் தியாகராஜா சுதர்மன் நிகழ்த்தினார். (ச-45-66)

# கிளிநொச்சி மாவட்ட விவசாயக்குழுக் கூட்டம்

கிளிநொச்சி,டிசெ.12
கிளிநொச்சி மாவட்டத்தின் நடப்பாண்டுக்கான இறுதி மாவட்ட விவசாயக் குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெற்றது.
கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ். முரளிதரன் தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் குறித்த கலந்துரையாடல் நடைபெற்றது. இதன்போது கிளிநொச்சி மாவட்டத்தின் விவசாயத்துறை சார்ந்த பல்வேறு விடயங்கள் விரிவாக ஆராயப்பட்டன. கடந்தகாலக் கூட்டறிக்கை, நீர்ப்பாசனக் குளங்களின் தற்போதைய நிலைமைகள், சிறுபோகப் பயிர்ச்செய்கை, துறைசார்ந்து தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற திட்டங்கள் என்பன தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டன. (ச-33-113)





# கழிவகற்றல் செயற்றிட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 12
திண்மக்கழிவகற்றல் முகாமைத்துவத்தினை மாணவர்கள் மத்தியில் மேம்படுத்தும் முகமாக வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் விசேட செயற்றிட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. கல்லூரி நிர்வாகத்தினரால் 17 ஆயிரம் பிளாஸ்ரிக் கொள்கலன்கள் சேகரிக்கப்பட்டு மீள் சுழற்சிக்காக விற்பனை செய்யப்பட்டன. அதிகளவு பிளாஸ்ரிக் கொள்கலன்களை சேகரித்த மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன. (ச-25, 125)







# செயற்பட்டு மகிழ்வோம்

கிளிநொச்சி.டிசெ.12
வடமாகாண மட்ட ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கான செயற்பட்டு மகிழ்வோம் போட்டி கிளிநொச்சியிலுள்ள வடமாகாண விளையாட்டுக் கட்டடத்தொகுதியின் மைதானத்தில் ஆரம்பமாகி நடைபெற்றுவருகின்றது.
வடமாகாணக் கல்விப்பணிப்பாளர் கந்தையா பிரட்லி ஜெனட் தலைமையில் நடைபெற்றுவரும் ஆரம்ப நிகழ்வில் வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் ம.பற்றிக்டிறஞ்சன் கலந்து கொண்டு போட்டியை ஆரம்பித்துவைத்தார். இது வடமாகாணத்திலுள்ள ஐந்து மாவட்டங்களில் 13 கல்வி வலயங்களைச் சேர்ந்த ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கிடையிலே இடம்பெறுகின்றது. (ச-33-113)

# பால்நிலை வன்முறை தடுக்கும் விழிப்புணர்வு

முல்லைத்தீவு, டிசெ.12
புதுக்குடியிருப்பில் இயங்கிவரும் விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் பால்நிலை வன்முறைகளைத் தடுக்கும் விழிப்புணர்வும், சர்வதேச மாண்புடன் கூடிய மாதவிடாய் சுகாதார தினமும் விழுதுகள் நிறுவனத்தின் உத்தியோகத்தர் மோகனதாஸ் சர்மிளா தலைமையில் நேற்றுமுன்தினம் செவ்வாய்கிழமை நடைபெற்றது. இதன்போது மாண்புடன் கூடிய மாதவிடாய் தொடர்பான விளக்கம், இளவயதுத் திருமணம், சிறுவர் துஷ்பிரயோகம், பாடசாலை இடைவிலகல் தொடர்பிலும் பிள்ளைகளின் நடத்தை சார் (தொடுகை) தொடர்பிலான விழிப்புணர்வுகள் வழங்கப்பட்டன. (ச-45-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொது மக்களுக்கான அறிவித்தல்
## கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு
### 2025 ஆம் ஆண்டிற்கான குத்தகை வழங்குவதற்கான பகிரங்க ஏலம் கூறல்

கரைதுறைப்பற்று பிரதேசசபையின் அதிகார எல்லைக்குள் காணப்படும் சந்தைகள் மற்றும் இறைச்சிக் கடைகள் என்பனவற்றை 2025ம் ஆண்டு ஜனவரி மாதம் 1ம் திகதி முதல் டிசம்பர் மாதம் 31ம் திகதி வரையிலான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான ஏலம் கோரப்படுகின்றது.

பற்றுச்சீட்டு வழங்கப்படும் காலம் :- 12.12.2025 மு.ப 9.00 மணி தொடக்கம் 19.12.2024 பி.ப 02.00மணிவரை (அலுவலக நாட்களில் மட்டும்)

ஏலம் கூறப்படும் இடம் :- கரைதுறைப்பற்று பிரதேசசபையின் தலைமை அலுவலகம்

ஏலம் கூறப்படும் நேரம் :- 20.12.2024 முற்பகல் 10.30 மணி

| இல | விபரம் | கேள்விப்படிவக் கட்டணம் (VAT,NB) நீங்கலாக | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் ரூபா | கடைக்குரிய மாதாந்த வாடகைத் தொகை ரூபா | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த கேள்வித் தொகை (VAT,NB) நீங்கலாக |
|---|---|---|---|---|---|
| | **முல்லைத்தீவு உப அலுவலகம்** | | | | |
| 1 | முல்லைத்தீவு பொதுச்சந்தை | 2,000.00 | **33,000.00** | - | 1,092,150.00 |
| 2 | முல்லைத்தீவு மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | **56,800.00** | 5,000.00 | 1,890,000.00 |
| 3 | முல்லைத்தீவு கருவாட்டுக்கடை | 2,000.00 | **2,500.00** | 5,000.00 | 81,090.00 |
| 4 | முல்லைத்தீவு சிறுவர் பூங்கா சிற்றுண்டிச்சாலை | 2,000.00 | **14,500.00** | 4,500.00 | 475,200.00 |
| | **முள்ளியவளை உப அலுவலகம்** | | | | - |
| 5 | தண்ணீரூற்று பொதுச்சந்தை | 2,000.00 | **92,000.00** | - | 3,060,900.00 |
| 6 | வற்றாப்பளை பொதுச்சந்தை | 2,000.00 | **1,500.00** | - | 37,800.00 |
| 7 | கேப்பாப்பிலவு பொதுச்சந்தை | 2,000.00 | **200.00** | - | 4,500.00 |
| 8 | முள்ளியவளை மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | **32,500.00** | 3,150.00 | 1,080,000.00 |
| 9 | தண்ணீரூற்று மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | **73,200.00** | 2,700.00 | 2,439,990.00 |
| 10 | தண்ணீரூற்று கோழிஇறைச்சிக்கடை | 2,000.00 | **63,800.00** | 2,700.00 | 2,124,990.00 |
| 11 | தண்ணீரூற்று கருவாட்டுக்கடை | 2,000.00 | **1,000.00** | 2,700.00 | 22,950.90 |
| 12 | தண்ணீரூற்று சந்தை வாகனத்தரிப்பிடம் | 2,000.00 | **1,200.00** | - | 32,400.00 |
| | **கொக்கிளாய் உப அலுவலகம்** | | | | - |
| 13 | கொக்குத்தொடுவாய் பொதுச்சந்தை | 2,000.00 | **200.00** | - | 2,700.00 |
| 14 | கொக்கிளாய் கோழி இறைச்சிக்கடை | 2,000.00 | **14,500.00** | 1,000.00 | 473,310.00 |
| 15 | கொக்கிளாய் மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | **17,100.00** | 1,000.00 | 567,000.00 |
| | **முள்ளிவாய்க்கால் உப அலுவலகம்** | | | | - |
| 16 | முள்ளிவாய்க்கால் பொதுச்சந்தை | 2,000.00 | **200.00** | - | 2,551.50 |
| 17 | முள்ளிவாய்க்கால் கோழி இறைச்சிக்கடை | 2,000.00 | **200.00** | 1,000.00 | 3,600.00 |
| 18 | முள்ளிவாய்க்கால் மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | **3,000.00** | 1,000.00 | 93,150.00 |
| | **செம்மலை உப அலுவலகம்** | | | | - |
| 19 | அளம்பில் பொதுச்சந்தை | 2,000.00 | **400.00** | - | 9,900.00 |
| 20 | குமுழமுனை மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | **3,500.00** | 1,750.00 | 112,011.30 |
| 21 | செம்மலை கோழி இறைச்சிக்கடை | 2,000.00 | **300.00** | 1,000.00 | 8,100.00 |

### ஏலத்தில் பங்குபற்றுவதற்கான நிபந்தனைகள்

1. எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரமுண்டு. ஏற்றுக் கொள்ளக்கூடிய குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்புப்பணம் மீளளிக்கப்பட மாட்டாது. முதலாம் சித்திகர கேள்விதாரஉ கேள்வித் தொகையின் 1/3 பகுதியையும் வாடகை இருப்பின் வருட வாடகைத் தொகையின் 1/3 பகுதியையும் 2024.12.23 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்னர் குத்தகை, வாடகை வைப்பாக செலுத்தி சபையுடன் ஒப்பந்தமொன்றினை செய்து கொள்ள வேண்டும். தவறின் அடுத்த தர சித்திதாரர்களுக்கு தொலைபேசி மூலம் தகவல் வழங்கப்படும். அவர்கள் பெற்றுக் கொள்வதாயின் சம்மதக் கடித்தினை 2024.12.24 பிற்பகல் 3.30 மணிக்கு முன்பு சமர்பிக்கப்பட வேண்டும் . அவர்கள் குத்தகை மற்றும் வாடகை இருப்பின் குத்தகை, வாடகைத் தொகையின் 1/3 பகுதியை 2024.12.26 ஆம் திகதி மு.ப 02.00 **மணிக்**கு முன்னர் குத்தகை, வாடகை வைப்பாக செலுத்தி சபையுடன் ஒப்பந்தமொன்றினை செய்து கொள்ள வேண்டும். அத்துடன் மிகுதித் தொகையினை 8 சமபங்குகளாக பிரித்து மாசி தொடக்கம் புரட்டாதி வரையான காலப்பகுதிக்குள் அம் மாதம் இறுதித் திகதிக்கு முன்னைய வேலைநாட்களில் செலுத்த வேண்டும். தவறுமிடத்து மாதக் கட்டணத் தொகையின் 10% தண்டமும் மேலதிகமாக அறவிடப்படும். மேலதிக விபரத்தினை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
2. கேள்விப்பத்திரத்தினை பெற விரும்புவோர் வடக்கு மாகாண எல்லைக்குள் நிரந்தர வதிவிடத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும். அத்துடன் விண்ணப்பத்துடன் **தேசிய அடையாள அட்டையின் உறுதிப்படுத்திய பிரதி, தாம் வதியும் கிராம சேவையாளரிடம் பெற்றுக்கொள்ளப்பட்ட வதிவிடத்தின் வதிவிட சான்றிதழ் மூலப்பிரதி** ஆகியவற்றினை சமர்ப்பித்தல் வேண்டும்.
3. ஏலத்தில் பங்குபற்றும் ஏலதாரர் தங்களால் விண்ணப்பிக்கப்பட்ட ஏலத்தில் மட்டும் பங்குபற்ற அனுமதிக்கப்படுவர்.
4. **ஏனைய நிபந்தனைகள் உதயன் நாளிதளின் 12.11.2024 ஆம் திகதிய பத்திரிகையில் உள்ள எமது சபை கோள்வி கோரல் நிபந்தனைகளே அல்லது அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளவும்.**

**செயலாளர்,**
**கரைதுறைப்பற்று பிரதேசசபை,**
**முல்லைத்தீவு.**
**12.12.2024**

(cr 43860) (N-1)

# சட்டத்தின் ஆட்சியை வலுப்படுத்த வேண்டும்

## இலங்கைக்கு ஐ.நா. பிரதிநிதி அறிவுறுத்து

கொழும்பு, டிசெ. 12

நாட்டில் சட்டத்தின் ஆட்சியை வலுப்படுத்துவதும், சகலரும் அதற்கு மதிப்பளிப்பதை உறுதிப்படுத்துவதும் அத்தனை இலகுவான விடயமல்ல. தொடர்ச்சியான நடவடிக்கைகள் மூலம் இலங்கை அரசாங்கம் இதை நிறைவேற்றவேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி மார்க் அன்ட்ரூ பிரென்ஞ் தெரிவித்துள்ளார்.

மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு, இலங்கை தொடர்பில் அவர் நேற்றுமுன்தினம் தெரிவித்ததாவது:-

இலங்கையைப் பொறுத்தமட்டில் மனித உரிமைகள் பாதுகாப்பு, ஊழல் ஒழிப்பு, தேசிய ஒருமைப்பாட்டைக் கட்டியெழுப்பல் என்பவற்றை முன்னிறுத்தி கடந்த சில மாதங்களாக அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளை வரவேற்கின்றோம்.

அதேவேளை நாட்டின் பொருளாதார மீட்சிக்கும், வளர்ச்சிக்கும் மனித உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டியது அவசியமாகும். குறிப்பாக இலங்கையில் பின்தங்கிய மற்றும் நலிவுற்ற சமூகப் பிரிவினரின் உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கும், அவர்களை இலக்காகக்கொண்ட சமூகப் பாதுகாப்புச் செயற்றிட்டங்களை வலுப்படுத்துவதற்கும் உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

இலங்கை அதன் மனித உரிமைகள்சார் கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு அவசியமான ஒத்துழைப்புக்களை நாம் வழங்கி வருகின்றோம். நாட்டில் சட்டத்தின் ஆட்சியை வலுப்படுத்துவதும், சகலரும் அதற்கு மதிப்பளிப்பதை உறுதிப்படுத்துவதும் அத்தனை இலகுவான விடயமல்ல. மக்கள் மத்தியில் அரசாங்கம் தம்மீதான நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதன் ஊடாகவே அதனைச் செய்யமுடியும் - என்றார். (ம-இ)

# திருக்கார்த்திகை

யாழ்ப்பாணம், டிசெ.12

மூளாயூர் வதிரன்புலோ ஸ்ரீ முத்துக் குமாரசுவாமி ஆலயத்தில் திருக்கார்த் திகை உற்சவம் நாளை வெள்ளிக்கிழமை மாலை மிகச் சிறப்பாக நடைபெறவுள்ளது. விஷேட அபிஷேக ஆராதனைகளைத் தொடர்ந்து ஆலய முன்றலில் சொக்கப்பனையை ஏற்றிய பின் ஸ்ரீ சித்திவிநாயகரோடு கடந்த வருடத்தைப் போல இருவரும் வெளிவீதியில் ஒன்றாக வலம்வந்து அடியார்களுக்கு அருளாசிபுரிந்தருளுவார்கள். நிறைவாக இராப்போசனமும் வழங்கப்படும். (ச-25)

## 8ஆம் ஆண்டு நினைவுப் பிரார்த்தனை

மண்ணுலகில் 15 . 07 . 1931



விண்ணுலகில் 10 . 12 . 2016

நெடுந்தீவு மேற்கு
**அமரர் காமாட்சி கந்தையா**
திதி - கார்த்திகை பூர்வபக்க துவாதசி
12.12.2024)

**பேசியும் புரியாத உறவுகளுக்கு மத்தியில்**
**பேசாமல் புரிந்து கொள்ளும் உறவு "அம்மா"**
**கேட்டும் கொடுக்காத தெய்வங்களுக்கு மத்தியில்**
**கேட்காமல் கொடுக்கும் தெய்வம் "அம்மா"**
**இனி எத்தனை பிறவி எடுத்தாலும் நீயேதான்**
**எங்கள் அம்மா**

என்றும் உங்கள்
பிள்ளைகள்

(CS/56893) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாணசபைத் தேர்தலை நடத்த அழுத்தம் கொடுங்கள்

## புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ். மோடிக்குக் கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 12
இந்திய அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்ட மாகாணசபை முறைக்கான தேர்தலை இலங்கை அரசாங்கம் விரைந்து நடத்துவதற்கு அநுரவுடனான சந்திப்பின்போது இந்தியப் பிரதமர்மோடி வலியுறுத்தவேண்டும்.

-இவ்வாறு ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், புளொட் அமைப்பின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் ஆகியோர் கோரியுள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,
இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம் 13 ஆவது திருத்தச் சட்டம் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டது. கடந்த ஏழு வருடமாக மாகாணசபைத் தேர்தல்கள் நடத்தப்படவில்லை. இந்தத் தேர்தல் நடத்தப்படுமா? நடத்தப்படாதா என்பது குறித்து எங்களால் எதிர்வுகூற முடியாதுள்ளது. எனவே தமிழர்களுக்கான தீர்வாக இந்திய அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்ட மாகாண சபைத் தேர்தலை உடனடியாக நடத்துவதற்கு பிரதமர் மோடி ஜனாதிபதி அநுரவிடம் வலியுறுத்த வேண்டும் - என்றனர். (ச-125)


## முதலாம் ஆண்டு நினைவு தின அழைப்பு



கடந்த (24.11.2024) வெள்ளிக்கிழமை அன்று சிவபதம் அடைந்த
எமது குடும்பத் தலைவர்
**அமரர் திரு ஜெகநாதன் சிவதாசன்**
(நாதஸ்வரவித்துவான்)

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவுதினம் இன்று (12.12.2024) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நண்பகல் 12.00 மணியளவில் **“கோண்டாவில் கிழக்கு ஆசிமட விநாயகர் ஆலய மணிமண்டபத்தில்”** நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்

கோண்டாவில் மேற்கு,
காளிகோயிலடி, கோண்டாவில். (CS/56892) J-1

குடும்பத்தினர்
077 573 6356


## சிறைத்திணைக்களத்தால் வீண்விரயச் செலவுகள்!

### தேசிய கணக்காய்வு அதிகாரசபை தகவல்

கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் சிறைச்சாலைகள் திணைக்களம் இந்த வருடம் ரூ.14 மில்லியனை அதிகமாகச் செலவிட்டுள்ளதாக தேசிய கணக்காய்வு அதிகாரசபை குறிப்பிட்டுள்ளது.

சிறைச்சாலை உத்தியோகத்தர்களின் வீடுகளை சுத்தம் செய்தல், திருத்துதல், புனரமைத்தல் போன்ற பணிகளில் கைதிகளை ஈடுபடுத்தியபோது சிறைச்சாலை உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட மேலதிக நேரக் கொடுப்பனவு, போக்குவரத்துக் கொடுப்பனவு போன்றவற்றுக்கே இந்தப்பணம் செலவிடப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது. அத்துடன் ஒன்பது வாகனங்கள் 62 தடவைகள் பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும் 372 கிலோமீற்றர் தூரம் பிரயாணம் செய்யப்பட்டுள்ளதாகவும் தேசிய கணக்காய்வு அதிகாரசபை மேலும் தெரிவித்துள்ளது. (ச-22.6)

## பால்நிலைசார் வன்முறைகள் இல்லாதொழிக்கவேண்டும்!

### வடக்கு ஆளுநர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், டிசெ.12
தற்போதைய காலத்தில் பால்நிலைசார் வன்முறை அதிகரித்துக் காணப்படும் நிலையில் பெண்கள் தங்களுக்கு எதிரான வன்முறை எந்தத் தளத்தில் நிகழ்ந்தாலும் முறைப்பாடுகளைச் செய்யமுன்வரவேண்டும் என்று வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்துள் ளார்.

'பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறையை இல்லாதொழிக்க ஒன்றிணைவோம்' என்ற தொனிப்பொருளில் பால்நிலை அடிப்படையிலான வன்முறைக்கு எதிரான செயற்பாட்டின் இறுதிநாள் நிகழ்வு வடக்கு மாகாண பிரதம செயலாளர் அலுவலக கேட்போர் கூடத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

இதில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,
பால்நிலை வன்முறைகள் தொடர்பில் பெண்கள் முறைப்பாடு செய்தாலும் தொடர் நடவடிக்கை எடுக்கப்படும்போது அதனை மீளப்பெறும் தன்மை இருக்கிறது. இவ்வாறு செய்வதால் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கமுடியாத நிலைமை காணப்படுகிறது.

தற்போதைய காலத்தில் சிறுமிகளுக்கு எதிரான வன்முறை அதிகரித்து வருவது டன்மதுசமூகத்தின்பண்பாட்டுமுறைமை இன்று தலைகீழாகச் சென்றுகொண்டிருக்கிறது. அதனைத் தடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார். (ச-20)


## மரண அறிவித்தல்



**கனகரத்தினம் மகிந்தன்**

அரியாலையைப் பிறப்பிடமாகவும், நெதர்லாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட கனகரத்தினம் மகிந்தன் அவர்கள் கடந்த (08.12.2024) ஞாயிற்றுக்கிழமை நெதர்லாந்தில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கனகரத்தினம் மற்றும் தனலட்சுமி தம்பதியரின் அன்புப் புதல்வனும், காலஞ் சென்ற தம்புகந்தையா மற்றும் நாகேஸ்வரி (நெதர்லாந்து) தம்பதியரின் அன்பு மருமகனும், கலாமதி அவர்களின் பாசமிகு கணவரும், கிருஷாந் (நெதர்லாந்), மதுரிவாசுகி ஆகியோரின் பாசமிகு தந்தையும், சர்வின்ரிசாந்திரகுமார்கோபால் அவர்களின் பாசமிகு மாமனாரும் துஸ்யந்தன், ஜெயானந்தன், சுகன்யா ஆகியோரின சகோதரரும் நவகுமாரி, கமலாவதி, அருண்நேசன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் கிஷன்சிவாவின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.12.2024) வியாழக்கிழமை நெதர்லாந்தில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(CS/2021) J-1

தகவல்: குடும்பத்தினர்
+31 61 980 4485


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12.12.2024 வியாழக்கிழமை

# ரயில் பயணச்சீட்டில் பெருமளவு மோசடி

கொழும்பு, டிசெ.12

நாட்டில் நீண்ட தூரம் பயணிக்கும் தொடருந்துகளின் முன்பதிவு பயணச் சீட்டு களைக் கொள்வனவு செய்து மிகப்பெரிய மோசடி ஒன்று இடம்பெற்றுள்ளதாக போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

குறிப்பிட்ட ஒரு குழுவினர் நீண்ட தூரம் பயணிக்கும் தொடருந்துகளில் பயணச் சீட்டுகளை முன்பதிவு செய்து அவற்றை வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு சுற்றுலா பயணிகளுக்கு அதிக விலைக்கு விற்பனை செய்துள்ளனர்.

இவ்வாறான மோசடிகளில் ஈடுபட்டு பயணிகளை சிரமத்துக்கு உள்ளாக்கிய வர்களின் தொலைபேசி இலக்கங்கள் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

மேலும், முன்பதிவு செய்யப்பட்ட பயண சீட்டுகளை மீளாய்வு செய்வதை கடுமை யாக்குவதற்கு சம்பந்தப்பட்ட துறை களை அறிவுறுத்தியுள்ளதாகவும் தெரி விக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 24 - 02 - 1957



மறைவு 01 - 12 - 2017

**அமரர் சிங்காரவேலு யோகநாதன்**

(உரிமையாளர் - Ogesta)

திதி: துவாதசி


ஆண்டுகள் ஏழு ஆயிடினும்
அன்பு முகம் மறக்கவில்லை என்றும் உம்
நினைவாய் இருந்தே நாம் தவிக்கின்றோம்
தூண்டா மணி விளக்காய் ஒளி வீசிப் பிரகாசித்தீர்
இன்று வேண்டித் துதித்தே இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்

185/1, கில்னர் லேன்,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.
021 221 6742

(CS/2026) J-1

## மரண அறிவித்தல்



**தம்பையா சிவானந்தராசா**

காரைநகர் தங்கோடையைப் பிறப்பிடமாகவும் கலைவாணி மில் வீதி கொக்குவில் கிழக்கு கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா சிவானந்தராசா (இலங்கை மின்சார சபை பொறியியலாளர்) அவர்கள் நேற்று (11.12.2024) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா (வாத்தியார்) -வள்ளிப் பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் ஆவார்.


அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (12.12.2024) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 10.00 மணியளவில் கிரிகைகள் நடைபெற்று தகனக்கிரிகைக்காக கொக்குவில் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
மனைவி மற்றும் பிள்ளைகள்

(CS 2028) P-1

## மரண அறிவித்தல்



**தம்பையா தங்கராஜா**

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் சித்தன்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா தங்கராஜா அவர்கள் கடந்த (09.12.2024) திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையா-வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற இராசரத்தினம்-பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் கோமளவல்லி (குஞ்சு) அவர்களின் பாசமிகு கணவரும் காசினி, தரணீதரன், பிரியதரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவகுமாரன், விஸ்னுகா, ஜெசிந்து ஆகியோரின் அன்பு மாமனாரும் கவிஸ், தருண், அயிரா, மெல்லினா, ஜெயனன், அஞ்சயன் ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்றவர்களான சுந்தரமூர்த்தி, சிவசுப்பிரமணியம், நடராஜா மற்றும் இராஜரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.12.2024) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் (பிள்ளையார் கோவிலடி, சித்தன்கேணி) இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வழுக்கையாறு இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 912 4042
078 266 1014

பழைய தபாற் கந்தோர்,
சித்தன்கேணி

(CR 43865) P-1

## கண்ணீர் அஞ்சலி

மலர்வு 01 . 12 . 1934



உதிர்வு 11 . 12 . 2024

**அமரர் குணஞானவதி குலசிங்கம்**

(இளைப்பாறிய ஆய்வுகூட தொழிநுட்பவியலாளர்,யாழ் போதனா வைத்தியசாலை)

எமது கொக்குவில் வளர்மதி முன்னேற்றக்கழகத்தின் ஆர்வலரும், அனுசரணையாளருமாகிய Dr. கு.சுரேஸ்குமார் (மகப்பேற்று வைத்தியர், யாழ் போதனா வைத்தியசாலை) அவர்களது அன்புத் தாயாரும் எமது வளர்மதி மகளிர் அமைப்பின் முன்னைய நாள் தலைவி திருமதி. வாசுகி சுரேஸ்குமார் அவர்களின் மாமியாரும் வளர்மதி முன்பள்ளி பழைய மாணவர்களாகிய செல்வி.சு.துவாரகி, செல்வி.சு.மயூரகி ஆகியோரின் பேத்தியாராகிய அமரர். குணஞானவதி குலசிங்கம் அவர்கள் இறைபதம் அடைந்து விட்டார். அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியை தெரிவித்து கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம். அமரரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்திற்கு எமது வளர்மதி முன்னேற்றக்கழகம் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிஜத்துக் கொள்கிறோம்.

கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகமும்
[illegible] நிலையமும்,
வளர்மதி நிறைவாழ்வகம்.

சம்பியன் லேன்,
கொக்குவில்.

(CS 2027) P-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மர்மமான...

யாழ்ப்பாணத்தில் கடந்த பத்து நாள்களுக்குள் திடீர் காய்ச்சல் மற்றும் சடுதியான சுகவீனம் என்பவற்றால் பலர் பாதிக்கப்பட்டு மந்திகை ஆதார மருத்துவமனையிலும், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையிலும் சேர்க்கப்பட்டிருந்தனர்.

இவர்களில் 7 பேரின் உடல்நிலை திடீரென மோசமாகி உயிரிழப்புகள் சம்பவித்தன. சுவாசத் தொகுதியில் ஏற்பட்ட செயலிழப்பு, கடுமையான பாதிப்பு உள்ளிட்ட பொதுவான அறிகுறிகளாலேயே இந்த இறப்புகள் சம்பவித்துக் கொண்டிருந்தன.

இறப்புக்கான காரணங்கள் உறுதிபடத் தெரியாத நிலையில், அவர்களில் பலரின் மாதிரிகள் கொழும்புக்கு அனுப்பப்பட்டன. எலிக்காய்ச்சல், பன்றிக்காய்ச்சல் போன்றன காரணமாகவே இந்த இறப்புகள் சம்பவித்திருக்கலாம் என்று ஊகிக்கப்பட்டிருந்தது. இவ்வாறான தொரு பின்னணியிலேயே, இந்த இறப்புகளில் கணிசமானவை எலிக்காய்ச்சலால்தான் சம்பவித்துள்ளதாக தற்போது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதாரத்துறை வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

சடுதியான காய்ச்சல் மற்றும் சுகவீனத்தால் கடந்த சில நாள்களுக்கு முன்னர் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டிருந்த ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார். அவர் உயிருடன் இருக்கும்போதே, அவரிடம் இருந்து மாதிரிகள் பெறப்பட்டு பரிசோதனைக்கு அனுப்பப்பட்டன. இதனால், அவரின் இறப்பும் எலிக்காய்சலால்தான் சம்பவித்துள்ளதாகத் தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அண்மையில் பெய்த கனமழையால் ஏற்பட்ட வெள்ளப் பேரிடர் காரணமாக வயல்களிலும், பொது இடங்களிலும் மழைநீர் தேங்கி நிற்கின்றது. இதனால் எலிக்காய்ச்சல் தொற்று தீவிரமாகப் பரவக்கூடிய சாத்தியங்கள் உள்ளதாகவும், பொதுமக்கள் தங்களின் குடிதண்ணீர் மற்றும் ஆரோக்கியம் என்பவற்றில் கூடுதல் கவனத்துடன் செயற்படவேண்டும் என்றும் சுகாதாரத்துறையினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## யாழ்ப்பாணம்...

பெற்றது. இதன்போதே, கடந்த ஒரு மாதத்துக்குள் மாவட்ட ரீதியாக இடம்பெற்ற சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, வேலணை பிரதேச செயலர் பிரிவில் இளவயதுக் கர்ப்பத்துடன் மூன்று சிறுமிகள் அவதானிக்கப்பட்டுள்ளனர். நல்லூர்ப் பிரதேச செயலாளர் பிரிவில் பாலியல் துஷ்பிரயோக முறைப்பாடு ஒன்றும் போதைப்பொருள்பாவனை மூலம் ஒரு துன்புறுத்தல் முறைப்பாடும், உடலியல் துன்புறுத்தலாக ஒரு முறைப்பாடும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் பெற்றோரால் புறக்கணிப்புச் செய்யப்பட்டதாகத் தெரிவித்து 3 முறைப்பாடுகளும், சங்கானையில் ஓர் உடலியல் துன்புறுத்தல் முறைப்பாடும், உடுவில் பிரதேச செயலர் பிரிவில் ஒரு பாலியல் துஷ்பிரயோக முறைப்பாடும், தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் ஒரு உடலியல் துன்புறுத்தல் முறைப்பாடும், கோப்பாயில் 3 இளவயதுத் திருமணமும், ஒரு பாலியல் துஷ்பிரயோகமும், 3 உள ரீதியிலான துன்புறுத்தலும், சாவகச்சேரியில் பிள்ளை பராமரிப்பின்மை தொடர்பில் ஒரு முறைப்பாடும், பருத்தித்துறையில் ஒரு பாலியல் துஷ்பிரயோக முறைப்பாடும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்ட சிறுவர்களை உளவளத்துணைக்கு உட்படுத்துதல், நன்னடத்தை உத்தியோகத்தரிடம் கையளித்தல், சட்ட ஆலோசனை வழங்கல், பாடசாலைகள் மற்றும் சிறுவர் இல்லங்களில் இணைத்தல் உள்ளிட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (அ-ம125)

## எலிக்...

நோய்நிலை நாடளாவிய ரீதியில் பெருந்தொற்றாக வியாபித்துள்ளது என்று தேசிய சுகாதாரத்துறையினர் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

எலிக்காய்ச்சல் பரவல் குறித்து சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட விசேட ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று இடம்பெற்றது. இதில் கலந்துகொண்ட தேசிய தொற்று நோய்ப் பிரிவின் விசேட மருத்துவ நிபுணர் குமுது வீரகோன் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த மாதத்தில் மாத்திரம் நாடளாவிய ரீதியில் எலிக்காய்ச்சலால் பாதிப்புற்று 9 ஆயிரம் பேர் அடையாளங்காணப்பட்டுள்ளதுடன் 200 பேர் உயிரிழந்துள்ளனர். இரத்தினபுரி, குருநாகல், காலி, மாத்தறை, கொழும்பு ஆகிய மாவட்டங்களிலேயே அதிக நோயாளர்கள் கண்டறியப்பட்டுள்ளனர்.

10 தொடக்கம் 12 மாவட்டங்கள் அதி உயர் அபாயம்மிக்க பகுதிகளாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் மாத்திரம் அண்ணளவாக 10 ஆயிரம் நோயாளர்கள் அடையாளங்காணப்பட்டுள்ளனர். மழையுடனான காலநிலை தொடரும் பட்சத்தில் நோய்நிலை அதிகரிக்கும் சாத்தியம் உள்ளது.

நோய் அறிகுறிகள் வெளிப்பட சுமார் 7 தொடக்கம் 14 நாள்களாகக் கூடும். ஆகையால் விவசாயம், இரத்தினக்கல் அகழ்வு, சுரங்கத் தொழில் உள்ளிட்ட பணிகளை மேற்கொள்பவர்கள் காய்ச்சல்கள் ஏதும் ஏற்படின் உடனடியாக மருத்துவமனையை நாடுவது நல்லது. நோய்த் தொற்றுக்கு ஆளானவரிடம் கடுமையான காய்ச்சல், தலைவலி, உடல் வலி, கண் சிவத்தல், வாந்தியும் குமட்டலும் போன்ற அறிகுறிகள் தென்படலாம் - என்றார். (அ-ம-இ)

## மர்மக்...

யான தொற்றுகள் உலுக்கிவரும் நிலையிலேயே, நோய் அறிகுறிகளுடன் இவர்கள் அனைவரும் நேற்று சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற மூவரின் உடல்நிலை மோசமடைந்ததைத் தொடர்ந்து அவர்கள் நேற்று இரவு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

எலிக்காய்ச்சல் பரவுகையில், தேசிய அளவில் ஆபத்து நிறைந்த 15 மாவட்டங்களில் (முதலாம் நிலை ஆபத்து, இரண்டாம் நிலை ஆபத்து) யாழ்ப்பாணமும் உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## வங்காள...

தெரிவித்ததாவது:-

வங்காள விரிகுடாவில் இந்த மாதம் மேலும் இரண்டு தாழமுக்கங்கள் உருவாகுவதற்குச் சாத்தியம் காணப்படுகின்றது. எதிர்வரும் 13 ஆம் திகதி ஒரு தாழமுக்கமும், எதிர்வரும் 20ஆம் திகதி மற்றொரு தாழமுக்கமும் உருவாகவுள்ளன.

இவை இரண்டும் வடக்கு, வடமேற்குத் திசை நோக்கி நகரும் வாய்ப்புள்ளது. இவையும் இலங்கைக்குக் குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு அண்மித்து வர வாய்ப்புண்டு. இவை பற்றிய மேலதிக விவரங்கள் விரைவில் அறியத் தரப்படும்- என்றார். (அ-ம-66)

## சமஷ்டியை...

நாடாளுமன்ற உறுப்பினரான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் உள்ளதாவது:-

தமிழர்கள் ஒற்றையாட்சிக்குள் தீர்வு காணமுடியாது என்பது எனது அனுபவத்தில் இருக்கக்கூடிய அசைக்குமுடியாத உண்மை. ஒற்றையாட்சி நிராகரிப்பு என்பது தமிழ்த்தேசியத்தின் அத்திபார நிலைப்பாடாக உள்ளது.

தமிழ் மக்களின் இனவழிப்பை அடிப்படையாககொண்டு இந்திய - இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. தமிழர்களுக்கு சார்பாக இந்த ஒப்பந்தம் தமிழர்களுக்கான தீர்வாக முன்மொழியப்பட்டது. அந்தத் தீர்வுக்குரிய அம்சம் எந்தச் சந்தர்ப்பத்திலும் ஒற்றையாட்சிக்குள் இருக்கவேண்டும் என்பதைக் கூறவில்லை. அது சமஷ்டித் தீர்வுக்கும் இடமளிக்கின்றது.

35 வருட தோல்வியை இந்த ஒப்பந்தம் எதிர்கொண்ட நிலையில் இந்தப் புதிய அரசு புதிய அரசமைப்பைக் கொண்டுவர முனைகின்றது. அந்தவகையில் இம்மாதம் இந்தியாவுக்கு வருகை தரவுள்ள ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிடம் தமிழ் மக்கள் ஏற்று கொள்ளக் கூடிய சமஷ்டி ஆட்சி முறையை வலியுறுத்த வேண்டும் - என்றுள்ளது. (அ-ச-125)

## உள்ளூர்...

தலைவர் ஜெயசேகரம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடமாகாணத்தில் கீரிச்சம்பா, வெள்ளைநாடு போன்ற தென்னிலங்கையில் இருந்து பெறப்படும் அரிசி வகைகளுக்குத்தான் தட்டுப்பாடு நிலவுகின்றது. மேலும் ஆட்டக்காரி மற்றும் மொட்டைக் கறுப்பன் போன்ற சுதேச அரிசி வகைகள் போதிய அளவில் கையிருப்பில் உள்ளன. ஆகவே அரிசிக்கான தட்டுப்பாடு தொடர்பில் பொது மக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை.

எனினும் ஆட்டக்காரி, மொட்டைக் கறுப்பன் போன்ற அரிசி வகைகளை விட தென்னிலங்கை அரிசி வகைகளையே பொருளாதாரத்தில் நலிவடைந்த மக்கள் குறைந்த விலையில் கொள்வனவு செய்வது வழமை. இந்தியாவில் இருந்து அரிசி இறக்குமதி செய்யப்பட்ட பின்னர் இந்தத் தட்டுப்பாடு நீங்கும் - என்றார். (அ-ம-125)

## வடக்கில்...

அறிவிக்கப்பட்டுள்ள நிலையிலேயே, முழுமையான ஆய்வு மற்றும் விசாரணைகளுக்காக இரண்டு குழுக்கள் இன்றும் நாளையும் கொழும்பில் இருந்து வரவுள்ளன. இந்தக் குழுவின் ஆய்வின் பின்னர், வடக்கில் எலிக்காய்ச்சல் மட்டும்தான் பரவுகின்றதா அல்லது இதர வைரஸ் தொற்றுகளும் பரவுகின்றதா என்பது தொடர்பான முழுமையான விடயங்கள் தெரியவரும் என்று சுகாதாரத்துறையினர் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக்கலாநிதி ஆ. கேதீஸ்வரனால், வடமாகாண ஆளுநருக்கும் விளக்கமளிக்கப்பட்டுள்ளது. இதன் போது, நோய்நிலையைக் கட்டுப்படுத்துவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகளை விரைவுபடுத்துவதற்காக தேவையேற்படின் மாவட்டத்தின் ஏனைய சுகாதார மருத்துவ அதிகாரிகள் பிரிவுகளிலிருந்து ஆளணியினரைப் பெற்றுப் பயன்படுத்துமாறு யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு ஆளுநர் அறிவுறுத்தல் வழங்கியுள்ளார். (அ-ம-26-20)

## நான்கு...

காலப்பகுதியில் பாடசாலை இடைவிலகல்கள் தொடர்பில் 58 முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் பதில் மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபன் இது தொடர்பில் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கடந்த நான்கு மாதங்களில் உள்ள 15 பிரதேச செயலர் பிரிவுகளில் மாணவர்களின் இடைவிலகல்கள் தொடர்பில் 58 முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. இதனடிப்படையில் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 7 முறைப்பாடுகளும், கரவெட்டியில் 3 முறைப்பாடுகளும், மருதங்கேணியிலிருந்து 2 முறைப்பாடுகளும், சங்கானையிலிருந்து 3 முறைப்பாடுகளும், உடுவில் பிரதேசத்தில் 1 முறைப்பாடும், தெல்லிப்பழை பிரதேசத்தில் இருந்து 12 முறைப்பாடுகளும், சாவகச்சேரியில் 6 முறைப்பாடுகளும், யாழ்ப்பாணத்திலிருந்து 3 முறைப்பாடுகளும், நல்லூர் பிரதேசத்திலிருந்து 4 முறைப்பாடுகளும், சண்டிலிப்பாயில் இருந்து 2 முறைப்பாடுகளும் பதிவுசெய்யப்பட்டுள்ளன. இவற்றுள் 56 முறைப்பாடுகள் விசாரிக்கப்பட்டு மாணவர்கள் மீளவும் இணைக்கப்பட்டுள்ளனர் - என்றார். (அ-ம-125)

## யானை...

பகுதியைச் சேர்ந்த ச.மோகனகாந்தி ராசா என்ற நபரே உயிரிழந்தவராவார். மாடுகளைக் கலைப்பதற்காகச் சென்றபோதே அவர் யானையின் தாக்குதலுக்கு உட்பட்டுள்ளார் என்று முதற்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ-ம-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலைக்கு ஆள் தேவை

கட்டட நிர்மாண வேலைக்கு டிரைவர் (Driver) தேவை.

தொடர்புகளுக்கு:
076 760 0403

## தையல் மற்றும் ஆரிவேக் பயிற்சி

வகுப்புக்கள் ஆரம்பம்
இடம் : மானிப்பாய் நகர்
ஆரம்பம் : 20.12.2024
தொடர்புகளுக்கு:-
077 190 7261, 077 143 2539
(CR/43868) J-1

## காணி விற்பனைக்கு

கந்தர்மடச் சந்திக்கும் - Hindu Ladies பாடசாலைக்கும் இடையில் காணி விற்பனைக்குள்ளது.
(சைவ மத குருக்கள் / ஆலய சுற்றுப்புறச் சூழலை விரும்புகிறவர்களுக்கு பொருத்தமான காணி)

- 1 1/4 பரப்பு
- சுற்றுமதில்
- குழாய் கிணறு

விலை : 3 கோடி 10 லட்சம்
(cs 2016) (N-1)

தொடர்பு: 076 772 5781
077 229 0303

## காசாளர்கள் தேவை

யாழ்நகர மத்தியில் இயங்கும் நிதி நிறுவனமொன்றிற்கு காசாளர்கள் (Cashers) தேவை. யாழ் மாநகர எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. ஓய்வுபெற்ற அரச அலுவலர்களும் விண்ணப்பிக்கலாம்.
076 337 0335
(cs.56888) (N-1)

## LRDC பாதுகாப்பு சேவைகள் நிறுவனம்



LRDC Services (Pvt) Limited என்பது அரசுக்கு சொந்தமான இலங்கை நில அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் (SLLDC) துணை நிறுவனமாகும். மேலும் கடந்த 20 வருடங்களாக நாட்டிற்கு அபிவிருத்தி தொடர்பான செயற்பாடுகளை வழங்கி வருகின்றது. தற்போது இது பொது, தனியார் மற்றும் உள்நாட்டு துறை நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களுக்கு நாடு முழுவதும் பாதுகாப்பு மற்றும் கண்காணிப்பு தீர்வுகளை வழங்கும் முன்னணி அரச அமைப்பாகும். நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் கீழ் வரும் முக்கிய நிறுவனங்களில் இதுவும் ஒன்றாகும்



நாடு பூராகவும் அமைந்திருக்கும்
யாழ்போதனா வைத்தியசாலை, நீர் வளங்கள்வழிகால மைப்புசபை, அரச தனியார் நிறுவனங்களுக்குபாதுகாப்பு சேவையின்

# தொழில் வாய்ப்பு

அடையாள அட்டை, பிறப்பு, கல்வி,கிராம சேவகர் சான்றிதளுடன் சமூகமளிக்கவும்
- விரைவான ஆட்சேர்ப்பு

கிருபாகரன் 077 433 1841 | அருள் 071 961 5772 | ஆனந்தன் 071 961 5700


# நன்றி நவிலல்



அன்னை மடியில் 26 . 06 . 1938
ஆண்டவன் அடியில் 10 . 11 . 2024

**அமரர் மனுவேற்பிள்ளை அருளப்பு (மரியதாஸ்)**
(முன்னாள் சித்திரா அச்சக உரிமையாளர்)

கடந்த 10.11.2024 இறைபதம் அடைந்த எமது அன்புத் தந்தையின் துயரச்செய்தி அறிந்து அலைபோல் வந்து குழுமிய அனைத்து உள்ளங்களுக்கும் அவரின் உடலுக்கு ஆசி வழங்கிய குருக்கள், கன்னியர்களுக்கும், இறுதி ஊர்வலத்தில் பங்குபற்றி கூடிச் செபித்த அனைவருக்கும், மற்றும் கண்ணீர் அஞ்சலிகள் பிரசுரித்தவர்களுக்கும், மலர்மாலை, மலர் வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், உள்நாடுகளில் இருந்தும், வெளி நாடுகளில் இருந்தும், தொலைபேசி மூலம் ஆறுதல் கூறிய அனைவருக்கும் அன்னாரின் இறுதிச்சடங்கு சிறப்புற நடைபெற உதவிபுரிந்த அனைத்து நல் உள்ளங்களுக்கும் எமது குடும்பத்தினர் சார்பாக அன்பு கலந்த நன்றிகள்.

(CS:56881) JK

ஏழாலை மேற்கு,
ஏழாலை.

**குடும்பத்தினர்**


## கூட்டுறவாளர் தினவிழா

யாழ்., டிசெ.12

யாழ். மாவட்ட பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்க சமாசத்தின் ஏற்பாட்டில் 102 ஆவது சர்வதேச கூட்டுறவாளர்தினவிழா, கூட்டுறவாளர் மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

சமாசத் தலைவர் செ.செல்வராசா தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், சிறப்பு விருந்தினர்களாக வட மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் ந.திருலிங்கநாதன், யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கி.சந்திரசேகர், கௌரவ விருந்தினராக கூட்டுறவுச் சபைத் தலைவர் க.மகாதேவன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ச-25, 17)

# மரண அறிவித்தல்



தோற்றம் 23 . 08 . 1947
மறைவு 10 . 12 . 2024

## ஆறுமுகம் இராசதுரை

**(இளைப்பாறிய தொழிநுட்ப உத்தியோகத்தர் - சாவகச்சேரி பிரதேச சபை)**

கைதடி கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் இராசதுரை அவர்கள் நேற்றுமுன்தினம் (10.12.2024) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் தில்லைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், கணபதிப்பிள்ளை - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், வசந்தமலர் அவர்களின் பாசமிகு கணவரும், இராசரத்தினம், காலஞ்சென்ற தளையசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஜங்கரன் (பிரான்ஸ்), சர்மினி, பன்னிருகரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தனுசா (பிரான்ஸ்), இளங்குமரன் (ஆசிரியர் - யா/கைதடி குருசாமி வித்தியாலயம்), கிறிஸ்ரினா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், திக்சிகா (பிரான்ஸ்), அஜய் (பிரான்ஸ்), ஆகாஸ் (பிரான்ஸ்), அக்ஷயன், லக்ஷயன், றயான் (பிரான்ஸ்), எபான் (பிரான்ஸ்), மைவா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும், சிவசோதியம்மா, பொன்னம்மா, காலஞ்சென்றவர்களான தில்லைநடராஜா, சிவஞானசுந்தரம், புஸ்பமலர் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.12.2024) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணி அளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊற்றல் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தில்லையம்பதி
ஆறுமுக பூங்கா,
கைதடி கிழக்கு, கைதடி.**

(CS/ 56890) J-1

**தகவல் :
குடும்பத்தினர்
077 869 4885**

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 05.08.1943
மறைவு 12.11.2024

## அமரர் பரராஜசிங்கம் புஸ்பராஜா

(உத்தரவுபெற்ற அரச நில அளவையாளர்)

குடும்பத்தின் குலவிளக்காய் பாசத்தின் பிறப்பிடமாய் தியாகத்தின்
உறைவிடமாய் வாழ்வின் வழிகாட்டியாய் கண்ணின் இமைபோல்
எனைக்காத்த அன்புத்தெய்வமே!

நீங்கள் என்னை விட்டு பிரிந்துநாட்கள் 31 ஆன போதும்
உங்களை இழந்த துயரை
ஈடு செய்ய முடியாமல் தவிக்கின்றேன் அப்பா!

அன்பையும் பண்பையும் வீரத்தையும் காட்டி வளர்த்தீர்களே. உங்கள்
நினைவுகளை மட்டும் விட்டுவிட்டு சென்று விட்டீர்களே.மறுபடியும்
உங்களை பார்க்க மாட்டேனா என ஏங்கித் தவிக்கின்றேன் அப்பா.
உங்கள் மீதான என் தேடல்கள் என் உயிர் மூச்சு
உள்ளவரை என்றும் ஓயாது!

**உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

அன்னாரின் வீட்டுக்கிரியைகள் இன்று (12.12.2024) வியாழக்கிழமை மு.ப 11.00 மணிக்கு அவரது இல்லத்திலும் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**24, செம்மணி ஒழுங்கை,
அரியாலை.**

**குடும்பத்தினர்**

(cs 56884) (N-1)

## மழை குறையும்!

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இன்றையதினம் மழை வீழ்ச்சி குறைவதற்கான சூழல் காணப்படுகின்றது என வளிமண்டலவியல் திணைக்கள உத்தியோகத்தர் பிரதீபன் தெரிவித்தார்.

இதனடிப்படையில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை காலை 8:30 மணி முதல் நேற்றுப் புதன்கிழமை காலை 8:30 மணி வரை 18.2 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பதிவானது என்றும், நேற்றுப் புதன்கிழமை காலை 8:30 மணி முதல் நேற்று மாலை 5:30 மணி வரை 28.3 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-125)



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 12.12. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org